**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 21.02.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **20.02.2018** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி ஆணையாளரது டிசம்பர் 2017 மற்றும் ஜனவரி 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3230/16/சி1)

**தீர்மானம் எண். 238**

அனுமதிக்கப்பட்டது

( 2 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 6 வடக்கு காலனி மற்றும் வார்டு எண். 8 மில் சந்து பகுதிகளில் பழுதடைந்துள்ள தண்ணீர் குழாய்களை மாற்றி, நீட்டிப்பு செய்யும் ரூ. 32000/– மதிப்பீட்டுப் பணிக்கு 28.12.17–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர் – மதிப்பீட்டைவிட 0.02% குறைவு
2) திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர் – மதிப்பீட்டைவிட 0.79% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.02% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1824/17/இ2)

**தீர்மானம் எண். 239**

அனுமதிக்கப்பட்டது

( 3 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளிலுள்ள குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உவர்நீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் ரூ. 500000/– மதிப்பீட்டுப் பணிக்கு 28.12.17–இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர் – மதிப்பீட்டைவிட 0.01% குறைவு
2) திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர் – மதிப்பீட்டைவிட 2.05% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.01% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2823/17/இ2)

**தீர்மானம் எண். 240**

அனுமதிக்கப்பட்டது

( 4 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள ஆழ்துளைக் கிணறு கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய தேவையான உதிரி தளவாடப் பொருட்களை வாங்க உத்தேசமாக ரூ. 200000/– (ரூபாய் இரண்டு இலட்சம்) ஆகும்.

கைப்பம்பு உதிரி தளவாடப் பொருட்களை தமிழ்நாடு அரசு நிறுவனமான "டான்சி"–யில் வாங்கிக் கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 200000/– மதிப்பிலான கைப்பம்பு உதிரி தளவாடப் பொருட்களை டான்சி நிறுவனத்தில் வாங்கிக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(170/18/இ2)

**தீர்மானம் எண். 241**

அனுமதிக்கப்பட்டது

( 5 ) இராசிபுரம் நகராட்சி ஈப்பு எண். ட்டி என் 28 ஏடி 4555 வாகனத்தின் டைனமோ பழுதினை சரி செய்ய பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) ஆண்டவர் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரீஸ், இராசிபுரம் | – | ரூ. 2800/– |
| 2) செல்வம் பேட்டரி ஒர்க்ஸ், இராசிபுரம் | – | ரூ. 3130/– |
| 3) அஷ்வாக் ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராசிபுரம் | – | ரூ. 2980/– |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள ஆண்டவர் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரீஸ், இராசிபுரம் நிறுவனத்தின் மூலம் டைனமோ பழுதுகளை சரிசெய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைவான விலைப்புள்ளியினை பெற்று ஈப்பு எண். ட்டி என் 28 ஏடி 4555 டைனமோ பழுதினை சரி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(2633/17/இ2)

**தீர்மானம் எண். 242**

அனுமதிக்கப்பட்டது

( 6 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 26 காட்டூர் காட்டுக்கொட்டாய் (சரஸ்வதி நகர்) பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 24000/–க்கு (ரூபாய் இருபத்து நான்காயிரம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மதிப்பீட்டிற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 24000/– மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(148/18/இ2)

**தீர்மானம் எண். 243**

அனுமதிக்கப்பட்டது

( 7 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பகுதி வாரியான வரைபடங்கள் (Zonetion pipe AO & A1 size) மற்றும் A4 அளவில் புகைப்படங்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்ப ஆகும் உத்தேச செலவினம் ரூ. 6000/—க்கு (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) புகைப்படங்கள் மற்றும் வரைபடங்கள் தயாரிக்க ஆகும் செலவினம் ரூ. 6000/—க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(218/18/இ2)

**தீர்மானம் எண். 244**

அனுமதிக்கப்பட்டது

( 8 ) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள். 1, 2, 7, 8, 9, 10, 20, 22, 23, 24, 25, 26, 27 ஆகிய 13 வார்டுகளிலுள்ள 40 வாட்ஸ் குழல் விளக்குகள் 526 எண்ணிக்கை 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் 67எண்ணிக்கை, மேலும் 1 x 36 CFL விளக்குகள் 484, உயர் கோபுர விளக்குகள் 7 எண்ணிக்கை மொத்தம் 1084 தெரு விளக்குகளை 1.4.2018 முதல் 31.3.2019 வரை 1 ஆண்டிற்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு செய்ய தனியார் வசம் ஒப்படைக்க ஏற்படும் (ஒப்பந்தப்புள்ளி மூலம்) உத்தேச செலவினம் ரூ. 990000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(285/18/இ1)

**தீர்மானம் எண். 245**

அனுமதிக்கப்பட்டது

( 9 ) இந்நகராட்சிக்குச் சொந்தமான தெரு விளக்குகளை பராமரிக்க தேவைப்படும் மின் உபகரணங்கள் (2018—19) கொள்முதல் செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(286/18/இ1)

**தீர்மானம் எண். 246**

அனுமதிக்கப்பட்டது

(10) இந்நகராட்சிக்குச் சொந்தமான தட்டான்குட்டை உரக்கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை சமன் செய்தல் பணி மேற்கொள்ள 28.12.2017–ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | அதிகம் | குறைவு |
| 1 | மனோ கன்ஸ்ட்ரக்ஷன், காமராஜர் நகர், நாமக்கல் | ரூ. 3.50 லட்சம் | – | 0.17% |
| 2 | M/s. நாமக்கல் கன்ஸ்ட்ரக்ஷன், 45, ராமசாமி ஆர்கேட், நாமக்கல் | | – | 0.14% |

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டைவிட குறைவாக இருந்தாலும் அவற்றில் மனோ கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனம் 0.17% சதம் குறைவாக அளித்துள்ளதால் மேற்படியாரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மனோ கன்ஸ்ட்ரக்ஷன், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**(2844/17/இ1)**

**தீர்மானம் எண். 247**

அனுமதிக்கப்பட்டது

(11) இராசிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலைய புதிய கழிப்பிடத்திற்கு, நகர சுத்தி தொழிலாளர் காலனிக்கு தண்ணீர் செல்லும் 63 மி. மீ. அளவுள்ள குழாயிலிருந்து இணைத்து தண்ணீர் வசதி செய்ய ரூ. 10000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 10000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ஆ) செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(305/18/இ2)**

**தீர்மானம் எண். 248**

அனுமதிக்கப்பட்டது

(12) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் 3 வீல் ஆட்டோ TN 28 AZ 2077–இன் தகுதிச்சான்று மற்றும் பழுதுகள் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 36000/– துப்புரவு அலுவலர் அவர்கள் குறிப்பு வழங்கியுள்ளார். எனவே, ரூ. 36000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(2681/17/எச்1)**

**தீர்மானம் எண். 249**

அனுமதிக்கப்பட்டது

( 13 )  இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் ஆட்டோ TN 28 Q 9138–இன் தகுதிச்சான்று மற்றும் பழுதுகள் நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 42000/– துப்புரவு அலுவலர் அவர்கள் குறிப்பு வழங்கியுள்ளார். எனவே, ரூ. 42000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2682/17/எச்1)

**தீர்மானம் எண். 250**

அனுமதிக்கப்பட்டது

( 14 )  இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின்கீழ் நகர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட, இராசிபுரம் நகராட்சி வ.ஊ.சி. நகர், நகரளவை வார்டு–சி, பிளாக் எண். 2, நகர புல எண். 46–இல் ஆணையாளர் பெயரில் உள்ள இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில், நகர ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும், அவ்விடத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி பழமையான கட்டிடத்தை இடிக்க நகராட்சி பொறியாளரின் குறிப்பு பெறவும், அங்கன்வாடி மையத்தினை தற்காலிகமாக நெசவாளர் காலனி சமுதாயக் கூடத்திற்கு மாற்றம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகர சுகாதார நிலையம் நகரளவை வார்டு–சி, பிளாக் எண். 2, நகர புல எண். 46–இல் அமைக்கவும், அங்கன்வாடி மையத்தினை தற்காலிகமாக நெசவாளர் காலனி சமுதாயக் கூடத்திற்கு மாற்றம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(197/18/இ1)

**தீர்மானம் எண். 251**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– ப. கிருஷ்ணமூர்த்தி
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி